RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-222924

OPEN ACCESS

# பத்துப்பாட்டு புற இலக்கியத்தில் அரசர்களின் ஆளுமை

அ. கலைவாணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# The personality of the Kings in Pathupatu

A. Kalaivani [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641 043, Tamil Nadu, India

* Corresponding Author:
kalaivani_tam@avinuty.ac.in

Received: 08-09-2022
Revised: 03-11-2022
Accepted: 19-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

Literature is called the mirror of time which shows the life of the past. Those who read these literatures know that the poets of that time who recorded them were multi-faceted personalities and the Sangam literary works are the most prominent among these literatures which are of various types. Human society is getting new development day by day. Development is very important for the country and society. Despite the passage of seven thousand years, Sangam literature is still alive today. The most basic reason for them is that the ideas expressed in them are timeless. The Mantras portrayed in Sangam literature belong to one period but their thoughts and actions are different. so by studying their thoughts and actions we can know their different status. Psychology is used to improve the balance of human social life and to learn about the nature of human mental activities such as thought, imagination and emotion.

**Keywords:** Kings, Sangam Literature, Human society, Emotion

## முன்னுரை

இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தினைச் சங்க காலம் என்பர். இக்காலம் தமிழின் பொற்காலம் என்று போற்றப்படுகின்றது. இக்காலத்தில் உயர்ந்த இலக்கியங்களும், ஆராய்ச்சி திட்பம் மிகுந்த இலக்கண நூல்களும் தோன்றின. இவ்வாறு தோன்றிய நூல்களில் பாட்டும் தொகையும் என்று கூறப்படும் இலக்கிய நூல்கள். அக்காலப் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற செய்யுட்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற இனிய செய்யுட்களின் தொகுப்பாகும். இவ்விரு வகைத் தொகுப்பு நூல்களையும் சங்க காலத்து இரட்டைக் குழந்தைகள் எனலாம். இவற்றுள் பாட்டு என்று குறிக்கப் பெறும் பத்துப்பாட்டு என்பது பத்து நெடும் பாட்டுகளை உடையது. இவற்றில் புற இலக்கியத்தில் அரசர்களின் ஆளுமையைப் பற்றி இக்கட்டுரையின் வழி அறியலாம்.

## உளவியல்

உளவியல் (Psychology) என்னும் சொல் கிரேக்க மொழிச் சொற்களான 'ஸைக்கி' (Psyche) என்ற உயிரைக் குறிக்கும் சொல்லையும், 'லோகஸ்' (Logus) என்னும் அறிவியலைக் (Scicnce) குறிக்கும் சொல்லையும் மூலமாக கொண்டு உருவாக்கப்பட்டதே ஆகும்.

'மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலமாக அவை, எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியலாகும்

உளவியல் 'மனிதனின் செயல்களைப் பற்றியும் நடத்தைகளைப் பற்றியும் மனச்செயல் முறைகள் பற்றியும் அறிய உதவும் ஓர் அறிவியலாகும்' என்கின்றது வாழ்வியல் களஞ்சியம் (TU, 1991).

## உளவியல் பிரிவுகள்

உளவியல் பல்வேறு உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. கவனம், கற்றல், நினைவு, நுண்ணறிவு. வாக்கம், உணர்ச்சி, கற்பனை, ஆளுமை போன்ற பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது. மனிதன் ஒவ்வொருவறும் தன்னைப் பற்றி அறிந்து கொள்ளவும், பிறரைப் பற்றிப் புரிந்துகொள்ளவும் மிகுந்த ஆர்வமுடையவனாக இருப்பது இயல்பான ஒன்றாகும் என்பதன் அடிப்படையில் உளவியல் பிரிவுகளில் ஒன்றான ஆளுமையைப் பற்றி காணலாம்

### ஆளுமை

ஆளுமை என்பது ஒரு மனிதனைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடியதாகும். ஆங்கிலத்தில் ஆளுமையைக் குறிக்கும் 'பர்ஸனாலிடி' (Personality) என்னும் சொல் லத்தீன் மொழியிலுள்ள பர்ஸொனா என்ற சொல்லிலிருந்து பிறந்தது. நாடக மேடையில் நடிப்பவர்கள் தாங்கள் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்புக்கு தக்கபடி அணிந்திருந்த முகமூடியே ஆளுமை எனப்படும். இவ்வாறு பத்துப்பாட்டில் புற இலக்கியங்களில் உள்ள அரசர்களின் அரசாட்சியாளுமை, நீதியாளுமை, கொடையாளுமை விருந்தோம்பலாளுமை போன்ற பண்புகளில் அவர்களின் நலன்கள் எவ்வாறு மாறுபடுகிறது என்பதை அறியலாம்.

### அரசன் தகுதிகள்

அரசனாவதற்குரியவன் இளமையிலேயே பல கலைகளையும் சுற்று, பலவகைப்பட்ட பயிற்சியும் பெற்று, வேட்டையாடுவதிலும் தேர்ச்சியுற்று. அறிவு, ஆற்றல், அன்பு, அறம், மறம் போன்ற குணங்களை ஒருங்கே உடையவனாய், பல அருஞ்செயலும், அறச்செயலும் ஆற்றிக் குடிகளின் உள்ளத்தைக் கவர்ந்த ஆளுமை உடையவனாய் இருத்தல் வேண்டும்.

### அரசனின் குணங்கள்

நாட்டை ஆளும் மன்னனுக்கு அமைய வேண்டிய நல்லியல்புகள் அரச குணங்கள் எனப்படும். கொடைப்பண்பை அறிதல், எப்போதும் இனிமையாக இருத்தல், அகம் புறம் இரண்டிலும் சிறந்து விளங்குதல், பாதம் பணிந்த பகைவர்களுக்கு இரக்கம் காட்டுதல், கோபம் இல்லாது இருத்தல், பகைவர் படைகளை அழிக்கும் ஆண்மை குணம், நினைத்ததை முடிக்கும் தன்மை, பெண்களை பாதுகாத்தல், சான்றோர்களிடம் அறிவுத்திறனில் சிறந்து விளங்குதல், பரிசில் வேண்டுபவர்க்கு வேண்டிய வண்ணம் வழங்குதல் போன்ற நல்ஆளுமை குணங்களை கொண்டவர்களாக அரசர்கள் விளங்கினர். இச்செய்தியை,

"செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்
இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்
செறிந்துவிளக்கு சிறப்பின் அறிந்தோர்ஏத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சினம் இன்மையும்
ஆணணி புகுதலும் அழியடை தாங்கலும்

இன்னகை ஆயமோ டிருந்தோற் குறுகி" (Somasundarananr, 1960)

என்ற அடிகளின் வழி அரசனின் அளுமை குணங்களை உணரலாம்.

## அரசாளுமை

கரிகாலன் உலகை ஒரு குடையின் கீழ் வைத்து ஆண்டான். குடிமக்களிடம் குறையாத அன்பு கொண்டவனாய், அறம் கூறும் நூல்களை அறிந்து அம்முறைப்படி ஆட்சி புரிந்தான். 'வெண்ணி' என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் சேரனையும், பாண்டியனையும் வெட்டி வீழ்த்தி வெற்றி கொண்டான். பகைவர்களை வெல்லும் வேற்படையையுடைய சிறந்த வீரன், தீமை இல்லாத ஆட்சியையும் ஆண்மையையும் கொண்டவன் என்பதை,

"ஒரு குடையான் ஒன்று கூறப்

பெரிதாண்ட பெருங்கேண்மை

அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்

அன்னோன் வாழி வெல்வேற் குரிசில்" (Somasundarananr, 1960)

என்ற அடிகளில் கரிகாலனின் வீர மாட்சியும் அவன் குடிமக்கள் மீது கொண்ட மேன்மை என்னும் ஆளுமைப் பண்பும் விளங்குகிறது. தமிழகத்தில் முடியுடைய மூவேந்தர்களின் ஆட்சியை விட இளந்திரையனின் ஆட்சி வலம்புரிச் சங்கைப் போன்ற உயர்வுடையது, தூய்மையானது, அறம் புரிவதுமாகும். அவனது செங்கோல் ஆட்சி நிலவியுள்ள நாட்டில் வழிப்போக்கரை அலறும்படி தாக்கி அவர்தம் பொருள்களைக் கொள்ளைக் கொண்டு வாழ்க்கை நடத்துவோர் இல்லை. அவனது நாடு காவலையுடையது. நாட்டில் இடிகூட இடிக்காது. காட்டில் இருக்கும் புலி முதலிய கொடிய விலங்குகளும் தீமைகளைச் செய்யாது என்பதை

"குமலி தந்த மனவுச்சூல் உடும்பின்

வறைகால் யாந்தது வயின் தொறும் பெறுகுவிர்

இல் அடு கள்இன் தோப்பி பருகி

மல்லல் மன்றத்து மதவிடை கொண்டி" (Somasundarananr, 1960)

என்ற அடிகளால் அவன் குடிமக்களைக் காக்கும் பண்பு வெளிப்படுகின்றது. இளந்திரையனின் அரசாட்சியின் சிறப்பை,

"அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்

பல்வேல் திரையன்" (Somasundarananr, 1960)

அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநிறுத்தி அறவழியில் ஆட்சிபுரியும் ஆளுமைத் தன்மை கொண்டவனாகவும் கூர்மையான வேற்படையை உடைய வீரம் மிக்கவனாகவும் விளங்கினான்.

## நீதியாளுமை

பண்டைய அரசர்கள் நடுவு நிலைமையோடு நீதி வழங்கிய வரலாற்றுப் பண்பை காணலாம். முதியோர் இருவர் முரண்பட்டு வழக்கைக் கொண்டு வந்தனர். கரிகாலனைப் பார்த்து இவன் இளையவன் என்று எண்ணி வழக்கை வயது முதிர்ந்த முதியவரிடம் மாற்றினான். பின்னர் அவனே முதியவர் போன்று வேடம் புனைந்து அறங்கூறும் அவையில் இருந்து வழக்கை ஆராய்ந்து அவர்கள் மகிழும்படி நீதி கூறினான் என்பதை,

"முதியோர்

அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்" (Somasundarananr, 1960)

என்ற பாடல் குலவித்தை கல்லாமற் பாகுபடு இல்லாமல் நீதி வழங்கினான் என்பதையும் எடுத்தியம்புகிறது. குலத்தொழில் கற்றுக் கொடுக்காமலே இயல்பாக ஏற்படும் என்கிற ஆளுமைப் பண்பும் இதன் வழி புலப்டுகின்றது.

பகற்பொழுதைச் செய்யும் ஞாயிறு தன் ஒளிக்கதிர்களை பரப்பினாற் போலத் திரையன் பரந்த அருள் உணர்ச்சியுடன் தம் சுற்றம் சூழ வீற்றிருப்பான். அவன் நடுவு நிலை உண்மையை ஆராய்ந்தறியும் அறிவுடையவன். முறை வேண்டுவோர்க்கு முறை வழங்குபவன். குறை வேண்டுபவர்க்கு வேண்டியதைத் தரக்கூடிய பண்புள்ளவன் என்பதை

"குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பான்

பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு

முறை வேண்டு நர்க்கும் குறை வேண்டு நர்க்கும்

வேண்டுப வேண்டுப அருளி

இடைத் தெரிந்து உணரும் இருள்தீர் காட்சி" (Somasundarananr, 1960)

என்ற இவ்வடிகளின் மூலம் அரசர்கள் நீதி வழங்கும் ஆளுமையை அறியலாம்.

## கொடையாளுமை

நல்லியக்கோடன், நன்னன், திரையன் போன்றோர் தன்னை நாடி வந்தவர்களுக்கு புத்தாடை தந்து முதலில் உடுத்துச் செய்வார்கள். பாணர், விறலி, கூத்தர் போன்றோருக்குத் தேவையான பேரணிகலன்களையும்.

தேர்கள், குதிரைகள், யானைகள், பசுக்கள் போன்ற பலவிதமான பரிசில்களை நல்கி வழியனுப்புவார்கள் என்பதை.

"ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி

திறல்சால் வென்றியொடு தெவ்வும்புலம் அகற்றி

வாள்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ" (Somasundarananr, 1960)

என்றும்.

"நாவல் அம் தன்பொழில் வீவுஇன்று விளங்க

நில்லா உலகத்து நிலைமை தூக்கி

அன்றே விடுக்கும் அவன் பரிசில்" (Somasundarananr, 1960)

என்றும்.

"இழை மருங்கு அறியா நுழை நூற்கலிங்கம்

எள் அறு சிறப்பின் வெள் அரைக் கொளீஇ

வென்று எழு கொடியின் தோன்றும்

குன்று சூழ் இருக்கை நாடு கிழவோனே" (Somasundarananr, 1960)

என்ற அடிகளின் மூலம் இவ்வரசர்களின் கொடைத் தன்மையை அறிய முடிகிறது.

## விருந்தோம்பலாளுமை

பழுமரம் தேடிச் செல்லும் பறவைகள் போலக் கரிகாலன். இளந்திரையன், நல்லியக்கோடன் போன்றவர்களை நாடிச் சென்ற புலவர், பாணர், கூத்தர் என்ற முத்தமிழ் வல்லார்கள் அப்பெருமக்கள்

அரண்மனையில் சிறந்த முறையில் விருந்துண்டனர். கரிகாலனால் உபசரிக்கப்பட்ட பாணனும் அவனது உறவினரும் செம்மறிக்கிடாயின் இறைச்சியையும், இரும்புக்கம்பியில் கோர்த்துச் சுட்ட கொழுத்த இறைச்சியையும் உட்கொண்டனர். பல வடிவங்களில் செய்யப்பட்ட பணியாரங்களையும் முல்லை அரும்பை ஒத்த சோற்றையும், பொரிக் கறியையும் உண்டனர். தெளிந்த இனிய மதுவையும் பருகினர் என்பதை.

“துராஅய் துற்றிய துருவைஅம் புழுக்கின்

பராஅரை வேவை பருகு எனத் தண்டி

அயின்ற காலை பயின்று இனிது இருந்து” (Somasundarananr, 1960)

என்ற அடிகள் பசி என்னும் கொடிய அரக்கனை உணவு என்கிற ஆயுதத்தால் அழித்து இரவலர்களை வாழ வைத்தனர். பசியின்றி இருக்கும் போது தான் அவர்களின் புலமை வெளிப்பாடு இருக்கும் என்பதை அறிந்து தான் புரவலர்கள் இரவலர்களுக்கு உணவு கொடுத்து உபசரித்தனர். நல்லியகோடன் அரண்மனையில் வீமசேனன் இயற்றிய மடை நூலிற் கூறிய முறைப்படி சமைத்த உணவுப் பொருள்களை பொற்கலத்தில் வழங்கினர் என்பதை,

“பூவரி கச்சைப் புகழோன் தன்முன்

பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்

விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி” (Somasundarananr, 1960)

இவ்வாறே திரையனும் தன்னை நாடி வந்த பாணரை நல்ல முறையில் உபசரித்தான். மடைத்தொழிலில் வல்லோர் ஆக்கிய இறைச்சியையும், சோற்றையும் சுவை மிகுந்த பிற உணவுப்பொருள்களையும் வெள்ளி உண்கலன்களில் இட்டு உண்ணச் செய்தான் என்பதை,

“கொடுவாள் கதுவிய விடுஆழ் நோன்கை

வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறைஅ

மங்குள் வானத்துத் திங்கள் ஏற்கும்” (Somasundarananr, 1960)

என்ற பாடல் அடிகள் உணவு தயாரிக்கவும் சிறந்த ஆளுமை வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. மேலும் நன்னனது அரண்மனையில் நெல்லரிசிச் சோறும் கொழுப்புடைய இறைச்சியும் கூத்தர்க்கு வழங்கியதை,

“முடுவல் தந்த பைந்நிணத் தடியொடு

நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது

தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து

பலநாள் நிற்பினும் பெறுகுவிர் நில்லாது” (Somasundarananr, 1960)

என்பதன் மூலம் இவர்களின் விருந்தோம்பல் மாண்பு என்னும் ஆளுமைப் பண்பு மேலோங்கி நிற்பதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

பத்துப்பாட்டில் அரசர்கள் நாட்டையும் நாட்டில் உள்ள மக்களையும் காத்து அவர்களுக்கு முறை தவறாது நீதி வழங்கிய ஆளுமைப் பண்பையும் இல்லை என்று வரும் பாணர், கூத்தர், விறலி போன்றோருக்கு தங்களால் இயன்ற அளவு பரிசில் வழங்கி அவர்களின் வறுமையைப் போக்கிய ஆளுமைப் பண்பையும் அவர்களுக்கு அருகிலேயே இருந்து விருந்தளித்து மகிழும் மாண்பையும் இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது.

## References

Nagarajan, G. (2009) Katral Manitha Valarchi Thodarbana Ulaviyal, Ram Pathipagam, Chennai, India

Somasundarananr, P.V. (1960) Pathupattu, Kalaga Veliyedu, Chennai, India

TU, (1991) Valviyal Kalanchiyam, Tamil University, Tanjavur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License